கதவின் மரணம்

ஒவ்வொரு கதவிற்கும்
ஒரு மரணம் உண்டு
காலம்தான்
கதவின் மரணத்தைக் கணிக்கின்றது

பல நேரங்களில்
கரையான்களும்
கதவின் மரணத்தை
எழுதி முடிக்கின்றன ...

சிற்சில வேளைகளில்
மனிதனின் கால் உதைபட்டு
உடைந்துபோய்
மரணம் தழுவும் கதவுகளும் உள்ளன ...

ஆணிகள் ஒற்றுமைத் துறந்தால்
தளர்ந்துபோகும் கதவுகள் ...

நீரும் நெருப்பும்
கதவுகளின் பகைவர்கள்
கதவின் மீது
காளான் பிறக்கவும்
பாசிகள் படரவும்
நீர்தான் ...
சாம்பலாக்கிடும் நெருப்பு ...

“டேய் ! அதுமேலப் போய்
மூத்தரத்தக் கொட்டாதடா
கதவு கெட்டுப்போய் ... டும்டா“
தாத்தாவின் அதட்டலில்
தடுக்கப்படும் ஒரு கதவின் மரணம் ...!

அருண், கிள்ளான்